தமிழ் நாடு அரசு

சுருக்கம்

பொதுப்பணிகள் நியமனம் செய்ய அண்ணா பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் செயல்முறை சார்ந்த வேதியியல் முதுநிலைப் பட்டப் படிப்பினை (M.Sc. Applied Chemistry)வேதியியல் முதுநிலைப் பட்டப்படிப்பிற்கு (M.Sc.,Chemistry) நிகராக கருதி அங்கீகாரம் செய்தல் ஆணைகள் வெளியிடப்படுகின்றன,

---

பணியாளர் மற்றும் நீர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை

அரசாணை நிலை எண்.164 நாள்,21. 8. 2000

விக்ரம ஆணை .6
திருவள்ளுவர் ஆண்டு 2031
படிக்கப்பட்டது:-

1,அண்ணா பல்கலைக்கழகப் பதிவாளரது கடித எண். 26442/றிஞி 4 /87, நாள்.10.2.88

2,தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையை செயலரது கடித எண்,6777/ஸிழிஞி-தி1/91

நாள்.23.5.2000.

--------

ஆணை:

அண்ணா பல்கலைக்கழக பதிவாளர், தங்களது பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் செயல்முறை சார்ந்த வேதியியல் முதுநிலை பட்டப்படிப்பை (M.Sc., Applied ChemistrY) வேதியியல் முதுநிலைப் பட்டப்படிப்பிற்கு (M.Sc., Chemistry) இணையாக கதி பொதுப்பணிகளில் வேலை வாய்ப்பிற்கு அங்கீகரிக்குமாறு பல வேண்டுகோள்களுள் ஒன்றாக அரசைக் கேட்டுள்ளார்,

2, 20,12,93 நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அரசாணை நிலை எண்.441ல் ஆணையிட்டவாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவரைக் தலைமையாக் கொண்டு இதற்கென அமைக்கப்பட்ட குழுவின் முன்னர் அண்ணா பல்கலைக் கழக பதிவாளரது கோரிக்கை பரிந்துரைக்காக வைக்கப்பட்டது.

3, 3,5,2000 அன்று நடந்த குழுக் கூட்டத்தில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு அண்ணா பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் செயல்முறை சார்ந்த வேதியியல் முதுநிலைப் பட்ட படிப்பினை (M.Sc.,Applied Chemistry) வேதியியல் முதுநிலைப் பட்டப் படிப்பிற்கு

(M.Sc.,Chemistry) நிகராக கருதி பொதுப் பணிகளில் வேலைவாய்ப்பிற்காக அங்கீகரிக்கலாம் என குழு பரிந்துரை செய்துள்ளது.

4, குழுவின் பரிந்துரைகளை அரசு தீவிர பரிசீலனைக்குப்பின் ஏற்றுக் கொள்ள முடிவெடுத்துள்ளது. அவ்வாறே அண்ணா பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் செயல்முறை சார்ந்த வேதியியல் முதுநிலைப்பட்டப் படிப்பினை (M.Sc., Applied Chemistry) வேதியியல் முதுநிலைப் பட்டபடிப்பிற்கு (M.Sc.,Chemistry) நிகராக கருதி அங்கீகரித்து அரசு ஆணையிடுகிது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சை மூனீர் ஹோதா
அரசு செயலர்.

பெறுநர்

அனைத்து அரசுச் செயலர்கள். சென்னை-9.
அனைத்து துறைத் தலைமை அலுவலர்கள்
செயலர், தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.
பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை-25,

நகல்:

முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையிலுள்ள அணைத்து பிரிவுகள், சென்னை-9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்